**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குமாரபாளையம்**

**அ.வ.எண்.259/2020**

**நாள்– 24.06.2026**

**வா.சா. 1 – சண்முகவேல்**

**மனு தாக்கல் செய்ததன் பேரில் 3ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

1) நான் இவ்வழக்கின் 1ம் வாதி ஆவேன். எனது தொழில் விவசாயம் ஆகும். இவ்வழக்கினை நான் கடன் கொடுத்தவர்களுக்கு பிரதிநிதியாக தாக்கல் செய்துள்ளேன். மொத்தம் எத்தனை பேர் கடன் கொடுத்தவர்கள் என்றால் நிறைய பேர் உள்ளனர், பெயர் தெரியாது. நான் எந்த தேதியில் கடன் கொடுத்த நபர்களின் கூட்டத்தினை கூட்டினேன் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. கடன் கொடுத்தவர்களின் விவரப் பட்டியலை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அவ்வாறு வழக்கு தாக்கல் செய்ய 1,2 வாதிகளை அந்தக் கூட்டத்தில் தான் பிரதிநிதியாக தேர்வு செய்தார்கள் என்றால் சரிதான். எத்தனை பேர் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள் என்றால் சுமார் 6,7 நபர்கள் கலந்துகொண்டார்கள். மேற்படி கூட்டத்தில் கலந்துகொண்டவர்களின் விவரங்களை நான் குறித்து வைத்துக்கொள்ளவில்லை என்றால் சரிதான். யார் யார் எவ்வளவு பணம் பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்டது என்று தெரிந்து கொண்டேனா என்றால் ஒவ்வொருவரும் ஒவ்வொரு தொகை கூறினார்கள், எனக்கு ஞாபகம் இல்லை, மேற்படி நபர்கள் தொகையாகவும், கடனுறுதிச் சீட்டிற்கு கடன் கொடுத்தார்கள்.

2) பிரதிநிதியாக என்னை யாருக்கு கடன் கொடுத்ததற்காக தேர்ந்தெடுத்தார்கள் என்றால் 1ம் பிரதிவாதிக்கு ஆகும். அவ்வாறு 1ம் பிரதிவாதிக்கு யார், எவ்வளவு, எந்த தேதியில் எதன் அடிப்படையில் கடன் கொடுத்தார்கள் என்றால் அதனை நான் குறித்துக் கொள்ளவில்லை. 1ம் பிரதிவாதிக்கு கடன் கொடுத்தவர்களை கூட்டிய கூட்டத்திற்கான ஆவணங்களோ, அவர்களின் முகவரிகளோ குறித்துக்கொள்ளவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தினை 12.01.2016 தேதியில் 1ம் பிரதிவாதி யாருக்கு விற்பனை செய்தார் என்றால் 2ம் பிரதிவாதிக்கு ஆகும். 1ம் பிரதிவாதி எவ்வளவு கடன் வாங்கியிருந்தார் என்றால் ரூ.50000/– என்னிடமிருந்து 24.02.2016 தேதியில் வாங்கியிருந்தார். ஏற்கனவே 1ம் பிரதிவாதி தாவா சொத்தினை வா.சா.ஆ.7ன் படி விற்ற பின்னிட்டு 1ம் பிரதிவாதியின் மீது வழக்கினைத் தாக்கல் செய்ய எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல, அவ்வாறு 1ம் பிரதிவாதி விற்பனை செய்தது எனக்குத் தெரியாது, நான் தாவா சொத்தின் பேரில் நம்பிக்கையில் கடன் கொடுத்தேன்.

3) வா.சா.ஆ.7 ஐ நான் தான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். நான் வா.சா.ஆ.7 குறித்து தெரியாது என்று சாட்சியமளிப்பது பொய் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி சம்பந்தமாக தாவா சொத்தின் பேரில் ரூ.50000/– கடனுக்கு வேண்டி நான் எந்த உரிமையும் கோர இயலாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆனது கடனுறுதிச்சீட்டு என்றால் சரிதான், 24.02.2016 தேதியிட்ட கடனுறுதிச் சீட்டு ஆகும். வா.சா.ஆ.1 ஆனது வா.சா.ஆ.7ற்கு பின்னிட்டு ஏற்படுத்தப்பட்ட கடனுறுதிச் சீட்டு என்றால் சரிதான். என்னை பிரதிநிதியாக நியமனம் செய்ய வேண்டி தாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண்.409/2017 என்ற மனு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பிரதிநிதியாக தேர்ந்தெடுப்பதற்கு உண்டான எந்த நடவடிக்கையும் எடுக்காமல் பிரதிநிதியாக தாக்கல் செய்யப்பட்டுள்ள இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அ.வ.எண்.40/2016 என்ற வழக்கின் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை இந்நீதிமன்றத்தில் வா.சா.ஆ.4 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி அ.வ.எண்.40/2016 வழக்கில் இ.ம.எண்.155/2016ல் தாவா சொத்தானது நீதிமன்றத்தால் பற்றுகை செய்யப்பட்டுள்ளது என்றாலும், மேற்படி பற்றுகை 15.09.2017 தேதியில் ஈரோடு முதலாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தால் நீக்கறவு செய்யப்பட்டது என்றாலும் எனக்குத் தெரியாது. மேற்படி வழக்கில் 2ம் வாதி மற்றும் 1ம் பிரதிவாதி தரப்பினர்கள் என்றால் எனக்குத் தெரியாது. மேற்படி மனுவினை தாக்கல் செய்தது 2ம் பிரதிவாதி என்றால் எனக்குத் தெரியாது. மேற்படி மனுவின் விவரம் எனக்குத் தெரியாது என்பது பொய் என்றாலும், நானும் 2ம் வாதியும் கூட்டாளிகள் என்றாலும் சரியல்ல.

4) அ.வ.எண்.40/2016ல் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச தீர்ப்பினை நடைமுறைப்படுத்த வேண்டி மனு தாக்கல் செய்தார்களா என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. 2ம் வாதியிடம் மேற்படி விவரத்தினை வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்போ, பின்போ கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. இவ்வழக்கில் ரூ.50000/–ற்கான வா.சா.ஆ.1 கடனுறுதிச் சீட்டினை தாவா சொத்து வா.சா.ஆ.7ன் படி விற்ற பிறகு எனது பெயரில் எழுதிக் கொடுத்ததால் இதனைப் பொறுத்து இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இவ்வழக்கில் நான் என்ன பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் நான் 1ம் பிரதிவாதிக்கு கொடுத்த பணத்தினை கேட்டு, 1ம் பிரதிவாதி செய்த கிரையத்தினை போலி கிரையம் என்று தாக்கல் செய்துள்ளேன். 1ம் பிரதிவாதி செய்த கிரையம் போலி கிரையம் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. ஈரோடு முதலாவது கூடுதல் மாவட்ட

நீதிமன்றம் தாவா சொத்தினை பற்றுகை செய்ய இயலாது என்று நீக்கறவு செய்துவிட்டது என்றாலும், வா.சா.ஆ.1, வா.சா.ஆ.7ற்கு பின்னிட்டு எழுதப்பட்டுள்ளது என்றாலும் அதனால் இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. 2ம் வாதியினை பொய்யாக கூட்டு சேர்த்தியுள்ளேன் என்றால் சரியல்ல.

5) வா.சா.ஆ.7 ன் படி தாவா சொத்து என்ன மதிப்பிற்கு கிரையம் செய்யப்பட்டுள்ளது என்றால் ரூ.6 லட்சத்திற்கு ஆகும். நீதிமன்றக் கட்டணம் தாவா சொத்தினை எவ்வளவு மதிப்பிற்கு செலுத்தியுள்ளேன் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. நீதிமன்றக் கட்டணமாக ரூ.180/– மட்டுமே செலுத்தியுள்ளேன் என்றாலும், தாவாவிற்கான முத்திரைக் கட்டணம் வேண்டும் என்றே குறைவாக செலுத்தியுள்ளேன் என்றாலும் இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. தாவா எங்கு எந்த தேதியில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. திருச்செங்கோடு மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் 19.08.2017 தேதியில் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். இவ்வழக்கு கால தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு எனக்கு எந்தவிதமான உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி உரிய சட்டக்கருத்துரு பெற்று தினசரி பத்திரிக்கையில் விளம்பரம் செய்து உரிய நபர்களிடம் இருந்து கிரையம் பெற்றுள்ளார் என்பதால் அதனை பொறுத்து வினவ எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல.

6) 3ம் பிரதிவாதி 26.08.2022 தேதியில் தினமலர் நாழிதழில் உரிய விளம்பரம் கொடுத்து கிரையம் பெற்றுள்ளார் என்றாலும், அவர் நேர்மையான கிரையதாரர் என்றாலும் எனக்குத் தெரியாது. மேற்படி பத்திரிக்கையானது குமாரபாளையம் சுற்றளவில் பிரசுரிக்கப்பட்டது என்றாலும், நான் தெரியாது என்று பொய் சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. 3ம் பிரதிவாதி நேர்மையான கிரையதாரர் என்றால் சரியல்ல. எனக்கும் 2ம் வாதிக்கும் பிரதிவாதிகள் மீது இவ்வழக்கினை தாக்கல் செய்ய எந்தவித முகாந்திரமும் இல்லை என்றால் சரியல்ல.

**(மறுவிசாரணை இல்லை)**